
www.tamilarangam.net

# யாவரும் கேளிரென...





## நாம் ஈழவர், நமது மொழி தமிழ், நம்நாடு ஈழம்.

### ஒன்றிணைக்கும் சக்தி
### முன்னெடுக்கும் சக்தி
### ஈழப்புரட்சியாளரின் அமைப்பு

# ஈரோஸ்

ஒரு புறத்தில் அரசாங்கம் யுத்தம் ஒன்றை பிரகடனப்படுத்தி தமிழ்பேசும் மக்களனைவரையும் ''பயங்கரவாதிகளாக்கி,'' எமதுமக்களை அழித்தொழிக்க கங்கணங்கட்டிச் செயற்பட்டு வருகின்றது. ஈழத்தின் தென்பகுதியில் அதாவது திருமலை மட்டக்களப்பு, அம்பாறைப் பிராந்தியங்களில் மிக மோசமாக தினமும் தேடுதல் என்ற போர்வையில் கைதுகளும், அழித்தொழிப்புநடவடிக்கைகளும் நடைபெற்ற வண்ணமாக எமது மக்கள் சொந்த மண்ணிலேயே அகதிகளாக-அனாதைகளாக நிர்க்கதிக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். ''அரசியல் தீர்வு'' காண்பது பற்றி அரசு உரத்துப் பேசி வரும் அதேசமயத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பெருமளவு நிதியும், அமெரிக்க ஆயுதக் கப்பல்களின் வருகையும், தொடர்ந்து இராணுவத்திற்கு ஆள் திரட்டப்படுதலும் போன்ற செயற்பாடுகள் அரசு எத்தகைய தீர்வைக் காண சித்தம் கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவு படுத்தும்.

நாட்டின் முழு மனித உழைப்பையும், வளங்களையும் ஒன்றுதிரட்டி புரட்சிகரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக செயல்படவேண்டிய இத்தருணத்தில் விடுதலைக்காகப் போராட புறப்பட்ட இயக்கங்கள் தமக்குள்ளே பலப் பரீட்சையில் இறங்குவதை மக்கள் நிச்சயமாக விரும்பமாட்டார்கள். ஏற்றுக்கொள்ளவும்மாட்டார்கள். எதிரியுடனான மோதலில் ஒன்றுபட வேண்டிய சக்திகள், தமக்குள்ளே மோதிக் கொள்வதனால் மக்கள் மத்தியில் வேதனையும் வெறுப்பும் ஏன் விரக்தியும் தான் மிஞ்சும். இன்றைக்கு விடுதலைக்காகப் போராடும் இயக்கங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பவை ஏதோ திடீரென தான்தோன்றித்தனமாக தோன்றிவிட்ட தலைமைகள் அல்ல என்பதை அனைவரும் அறிவர். அதே வேளையில் போராட்டம் என்பதும், மக்களின் மேம்பாட்டிற்காக உழைத்தல் என்பதும் ஏதோ ஒரு சில இயக்கங்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல. நீண்ட நெடிய வரலாற்றுப் பின்னணியோடு-எத்தனையோ தடைகளையும், மேடுபள்ளங்களையும் தாண்டி, பாரிய இழப்புக்களைச் சந்தித்துத் தரித்து விடுதலைப் போராட்டத்தின் விழுப்புண்கள் பலவற்றைக் கொண்டிருப்பவையே இயக்கங்கள். இவை எதிர்காலத்தைப் பற்றிய தூர நோக்குடனும், தீர்க்கதரிசனத்தோடும் செயற்படவேண்டியது அத்தியாவசியமானது. இதற்கு மாறாக விடுதலைக்காகப் போராட நாங்கள் மட்டும்தான் உரித்துடையவர்கள் என்ற இறுமாப்போடு—எமது செயல்கள் மட்டும்தான், சரியானவை மற்றையவை அனைத்தும் விடுதலைப் போராட்டப் பாதையை திசைதிருப்பிவிடும்

> நாட்டின் முழு மனித உழைப்பும், வளங்களும் புரட்சிகரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படல் வேண்டும்
>
> —லெனின்

> தலைமை தாங்கும் கட்சியொன்றின் தலைமையின்கீழ் நடைமுறைப் படுத்தப்படும், ஒழுங்குபடுத்தப்பட்ட எழுச்சியில் மக்கட் போரில் ஈடுபடும் அரசியற்படையே நாட்டுக்கு விசுவாசமான உண்மையான படையாக விளங்கும். இதில் உண்மையில் புரட்சிகர வர்க்கங்கள், நிச்சயமாக நாட்டிற்கு விசுவாசமான குழு பல்வேறுபட்ட ஆதிவாசிகள் ஆகியோரை தொழிலாளர் தலைமையின் கீழ், தொழிலாளர் விவசாயிகள் என்ற தேசிய ஒருமைப்பாட்டின் கீழ் அமைக்கப்பட்ட அமைப்புக்கள் ஆகியன அடங்கும். இவை உண்மையில் போர் அமைப்புக்கு வேண்டிய முன்னணி, பின்னணி ஆகிய எல்லாப் பிரிவுகளுக்குமான புரட்சிகரபடை அமைப்பு பொருளாதார கலாச்சார இராணுவ, ஆன்மீக, அம்சங்களைக் கட்டியெழுப்பி வளர்த்துக் கொள்கின்றன.
>
> —ஜெனரல் கியாப்

எனச் சில அமைப்புகள் சிந்திப்பது விவேகமாகாது. அதனால் சொந்த நலன்களை—ஆசாபாசங்களை மட்டுமன்றி குறுகிய ஸ்தாபன நலன் என்பதிலிருந்தும் விடுபட்டு பரந்துபட்ட பொதுமக்களின் மேன்மைக்காகவும், சமூகத்தின் இனத்தின் நன்மைக்காகவும் செயற்பட இயக்கங்கள் முன்வர வேண்டும். அப்போதுதான் எதிரிக்கு எதிரான யுத்தத்தில் ஐக்கியம் வலுப்பெறும். போராட்டமும் முன்னெடுக்கப்படும்.

போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற ஒரு அமைப்பின் பலம் என்பதை வெறுமனே ஆட்பலத்தை அல்லது விளம்பரத்தை மட்டும் கருத்தில் கொண்டு கணிப்பிடுதல் மிகமிகத் தவறானதாகவே இருக்கமுடியும். முதலாவதாக போராட்ட அணி முன்வைக்கும் அரசியல் கருத்துக்கள் ; அவற்றிற்கு மக்கள் மத்தியில் கிடைக்கும் ஆதரவு ; இந்தக் கருத்துக்களின் அரசியல் எதிர்காலம் ; என்பவற்றைக் கவனத்தில் எடுக்கவேண்டும். இரண்டாவதாக இக் கருத்துக்களை நடைமுறைப்படுத்துவதற்கு இருக்கக் கூடிய வசதிகளும், வாய்ப்புக்களும், மூன்றாவதாக அமைப்பு ரீதியாகச் செயற்படுவதற்குள்ள நிதியாதாரங்கள். நான்காவதாக சர்வதேச ரீதியாக குறித்த அரசியல் கருத்துக்களின் செல்வாக்கு. ஐந்தாவதாக ஆயுத ரீதியான பலமும் அமைப்பின் தோழர்களினது நேர்மையான அர்ப்பணிப்பும். இந்த அம்சங்களைச் சரியான முறையில் கணக்கிடுவதன் மூலமேதான் ஒரு இயக்கத்தின்—அமைப்பின் பலத்தை மட்டிட முடியும். அதில்லாமல் எப்போது ஆரம்பிக்கப்பட்டது ? என்பதை மட்டும் கவனத்தில் எடுத்து இயக்கத்தின் பலத்தைத் தீர்மானிப்பது கஷ்டமான காரியமாகிவிடும். எதிர் காலத்தின் பாரிய தவறுகளுக்கு வித்திட்டுவிடும்.

இந்த நேரத்தில் ஈழப்புரட்சி அமைப்பு (EROS) தான் நடந்துவந்த பாதையையும், கடந்துவந்த தடைகளையும் மக்களோடு பகிர்ந்து கொள்ள விழைகின்றது. ஏனெனில் நாம ஒரே அமைப்பாக ஒன்றுபட்டுச் செயலாற்ற தொடங்கிப் பத்து நீண்ட ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டது என்பதை மகிழ்ச்சியோடு நினைவு கூர்ந்து நாம் நடந்துவந்த பாதையில் பதித்து விட்ட காலடிச் சுவடுகளை தொட்டுக் காட்டுவது எந்த விதத்திலும் தவறாகிவிடாது. எழுபதுகளில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைகள் தமிழ்பேசும் மக்களை விடுதலைபற்றி சிந்திக்க வைத்தது. இந்த அரசியல் சூழ்நிலையின் பாதிப்பிற்கு இலங்கையில் வாழ்ந்தவர்கள் மட்டுமன்றி வெளிநாடுகளில் குறிப்பாக இலண்டனில் வாழ்ந்த பலரும்கூட இலக்காகினர். இதன் விளைவாக தமிழ்பேசும் மக்களின் அரசியல், சமூகப் பொருளாதார நிலைமைகளைத் துல்லியமாக ஆராய்ந்த ஆய்வாளர்கள் பின்வரும் முடிவுகளை வந்தடைந்தனர்.

- இலங்கை வாழ் சகல தமிழ்பேசும் மக்களுக்கும் விமோசனமளிக்கக்கூடியது, ஈழத்தின் விடுதலையே.
- ஈழத்தின் விடுதலை என்பது வெறுமனே அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வது மட்டுமல்ல. சமத்துவ சமதர்ம சமுதாயம் ஒன்றை அமைக்கும் சோசலிச சமதர்ம அரசை நிறுவுவது என்ற இலக்கையும் உள்ளடக்கியது.
- மன்னார் முதல் மட்டக்களப்புவரை பருத்தித் துறை முதல் பதுளைவரை பொத்துவிலும் உள்ளடங்கிய ஈழப் பிராந்தியத்தில் வாழுமனைவரையும் பிரதேச, மத வேறுபாடுகளுக்கப்பால் ஈழவர் எனக்குறித்துக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நவம்பர் 15ஐ நினைவுகூர்வோம்

கடந்த நவம்பர் மாதம் 15ம் திகதி மலையக மக்களின் வாழ்வுரிமைகள் பறிக்கப்பட்ட சோக தினமாக ஈழமெங்கும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. ஈழப்புரட்சி அமைப்பு (EROS) அதற்கான வேண்டுகோளை விடுத்திருந்தது. ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களின் ஒருபகுதியினரான மலையகத் தொழிலாளர்களை இனரீதியாக மட்டுமன்றி வர்க்க ரீதியாகவும் இனங்கண்டு அவர்களை நசுக்கும் முதல் நடவடிக்கையாகவே பேரினவாத அரசு அவர்களது குடியுரிமையை, வாக்குரிமையை பறித்தது. அத்தகைய இன ஒழிப்பு நடவடிக்கைகளின் பரிணாம வளர்ச்சியின் உச்சக்கட்டத்தில் இன்று தமிழ் பேசும் மக்களின் சகல வர்க்கத்தினரும் பாதிப்புற்று நிற்கின்றனர்; தமது பிரச்சனைகளுக்கான ஒரு தீர்வினை நாடுகின்றனர். தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளுக்கு வடக்கு — கிழக்கு இணைப்பே சரியானது என்ற போலியான ஒரு அரசியற் தீர்வுக்கு ஆதரவாக 'தமிழ்த் தலைமைகள்' குரல் கொடுக்கின்றன. இந்நிலைமையிலே அனுஷ்டிக்கப்பட்ட இக்கர்த்தால் அரசியல் ரீதியில் அநாதைகளாக்கப்பட்ட மலையக மக்களின் அவலநிலையை எடுத்துக் காட்டுவதாகவும், யதார்த்த நிலைமைகளை கவனத்திலெடுக்கத் தவறிய அத் 'தலைமை'களின் குரல்களுக்கு கொடுக்கப்படும் சரியான பதிலடியாகவும் அமைந்தது.

மலையக மக்களது பிரச்சனைகளுக்கும், வடக்கு, கிழக்கு, வாழ் தமிழ்பேசும் மக்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்றும் அவர்களுக்காக குரல் கொடுக்கும் உரிமை கூட இவர்களுக்கு இல்லை என்றும் அரசாங்கமும், அமைச்சர் தொண்டமானும், ஏனைய சில சக்திகளும் கூறிவந்தன. இந் நிலைமை மறுதலிக்கப்பட்டு வடக்கு--கிழக்கு வாழ் மக்கள் மலையகமக்களின் பிரச்சனையின் பால் கொண்டுள்ள அக்கறையை இப்பகுதிகளில் இக் ஹர்த்தாலின் வெற்றி எடுத்துக் காட்டியுள்ளது.

தமிழர்கள் என்ற ரீதியில் இனவாதத்தின் கொடூரத் தாக்குதலை முதன் முதலில் எதிர் நோக்கியவர்கள் என்ற வகையிலும், தமிழ்பேசும் மக்களின் தொழிலாள வர்க்கத்தின் முதுகெலும்பான பாட்டாளிகள் என்ற வகையிலும் மலையக மக்கள் ஈழத்தின் ஏனைய பகுதி மக்களது போராட்டத்தினின்று பிரிக்கப்பட முடியாதவர்கள். ஈழப் போராட்டம் என்பது வெறும் இன விடுதலைப் போராட்டம் மட்டுமல்ல — அது இனரீதியான உடைவினூடாக ஒரு சமதர்ம சமுதாயத்தைத் தோற்றுவிக்கின்ற வர்க்கப் போராட்டமாக வடிவமைக்கப்பட வேண்டும். எனவே அடித்தள மக்களது அபிலாசைகளை பிரதிபலிக்கின்ற இப்போராட்டத்தினின்று மலையக மக்கள் அந்நியப்படுத்தப்பட முடியாது. இந்நிலையில் அவர்களது பிரச்சனைகள் எவ்வாறு தீர்க்கப்பட முடியும் என்பது ஆழ்ந்து நோக்குதற்குரியது. முதலாவதாக அவர்கள் இரண்டு தலைமுறைகளுக்கு முன்பு எங்கிருந்து கொண்டு வரப்பட்டார்களோ அங்கு — அதாவது இந்தியாவிற்கே திரும்பிச் செல்வது. ஐக்கிய நாடுகள் சபையின் சாசன விதிகளின்படி ஒரு தலைமுறைக் காலம் ஓரிடத்தில் வாழுகின்ற மக்களுக்கு, அந்த மக்கள் வாழ்ந்த நிலம் சொந்தமானதாகும். எனவே அவர்களது குடியுரிமைகளை பறித்தது மட்டுமல்ல, அவர்களது நிலத்திலிருந்து அவர்களை பிரிப்பது கூட சர்வதேச சட்டங்களின் படி ஒரு மனித உரிமை மீறலாகும். இந்தியாவில் அவர்களுக்கு ஒரு வளமான வாழ்வு காத்திருக்கிறதா என்ருல் அதுவே ஒரு பரிதாபகரமான வரலாருகும். அங்கே 'சிலோன் காரர்கள், என்ற பட்டத்துடன் அவர்களது வாழ்க்கை சீரழிகிறது.

இரண்டாவதாக அவர்களை வடக்கு-கிழக்கில் வந்து குடியேறுமாறு ஏதோ கஞ்சிவார்க்கும் கருணையுடன் 'தமிழ்த் தலைமை'களால் விடுக்கப்படும் அழைப்பு. இந்த அழைப்பு அந்த மக்களை அவர்களது நிலத்திலிருந்து பிரித்தெடுக்கும் அரசாங்கத்தின் நோக்கத்துக்கு துணை போவதுடன் அவர்களது போராட்டச்சக்தியை குறைத்து மதிப்பிட்டு, முதுகெலும்பில்லாதவர்களாக அவர்களைக் கருதி, அவர்களது சக்தியை மழுங்கடிக்கும் நடவடிக்கையுமாகும். ஏற்கனவே கிளிநொச்சி, வவுனியா முதலான எல்லைப்புறங்களில் குடியேறிய மலையக மக்களின் நிலைமையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆயுதப்படையினரதும், குண்டர்களினதும் அட்டகாசங்களுக்கு அடிக்கடி பலியாவது மட்டுமன்றி, வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளை பெற்றுக் கொள்ளக் கூடிய தொழில் வாய்ப்புக்களுமின்றி கூலிகளாக இருபதாம் நூற்ருண்டின் நவீன அடிமைகளாக வாழ்ந்து வருகின்றனர்.

உண்மையில் அவர்களது பிரச்சனை என்ன? அவர்களது உழைப்பால் இரத்தமும், வியர்வையும் சிந்தி உருவாக்கப்பட்ட அந்த நிலம் அவர்களுக்கு சொந்தமாக்கப்பட வேண்டும். அவர்களது உழைப்பின் பயனை அவர்கள் அநுபவிக்கும் உரிமையை அவர்கள் பெறவேண்டும். அவர்களது உடைமைகளை தமதாக்கிக் கொள்வதற்கான அவர்களது போராட்டமானது அந்த நிலத்திலிருந்தே அவர்களால் நடத்தப்பட வேண்டியதேயொழிய அக்கரைக்கு குடிபெயர்வதாலோ அல்லது வடக்கு கிழக்கில் தஞ்சமடைவதாலோஅல்லஅவர்களது உடைமைப்பாட்டுக்கான அவர்களது போராட்டத்துடன் தமிழ்பேசும் ஏனைய மக்களது போராட்டமும் இணைக்கப்பட வேண்டும். இதுவே ஈழத்தை மீட்டெடுப்பதற்கான புரட்சிகர போராட்டத்துக்கு, மக்கள் எழுச்சிக்கு வழி வகுக்கும்.

இதனை நடைமுறைப்படுத்த மக்கள் மத்தியில் இந்தக் கருத்து எடுத்துச் செல்லப்பட்டு, அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ள மேற்படி ஹர்த்தால்; இனப்பிரச்சனையும், அதன் தீர்வு சம்பந்தமாக நாம் கொண்டுள்ள நிலைப்பாடும் சரியானதென்பதை நிரூபித்துள்ளது. இலங்கைத்தீவின் வடக்கு— கிழக்கு—மலையகம் அதாவது ஈழம் பூராவும் அதன் பிரதிபலிப்பினை காணக் கூடியதாக இருந்தது. குறிப்பாக ஹர்த்தாலின் போது வடக்கும், கிழக்கும் முற்ருக ஸ்தம்பித்தன. நுவரெலியா, தலவாக்கல, பதுளை போன்ற இடங்களில் 50 கடைகள் வரை மூடப்பட்டு இது விடயமாக முதற்தடவையாக ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இந்த நிகழ்வானது எமது குரலுக்கு மக்கள் கொடுத்த மதிப்பினை அதாவது மக்கள் இவ்விடயத்தில்எமக்காதரவாக எமது பக்கம் இருப்பதனை எடுத்துக் காட்டுகின்றது. ஹர்த்தாலின்போது கடந்த காலங்களில் ஏற்பட்டதுபோல இயக்கம் என்ற போர்வையில் இடம் பெற்ற இராணுவம் போன்ற தான அடாவடித்தனங்கள் எதுவும் இடம்பெருமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. அது மட்டுமன்றி கடந்த காலங்களில் இடம்பெற்றவை போலன்றி இக் ஹர்த்தாலின் நோக்கம் வேறுபட்டதாக அமைந்தது. தனிமனித இழப்புகளுக்கு அஞ்சலி செலுத்துவதாக அல்லாமல் அரசியல் நோக்கம் கொண்டதாக—ஒரு மக்கள் கூட்டம் அநாதைகளாக்கப்பட்டதை எடுத்துக் காட்டுவதும், நினைவுகூர்வதுமாக அது அமைந்தது ஒரு சிறப்பம்சமாகும். ●

---

காட்டியது. அதாவது 'நாம் ஈழவர்; நமது மொழி தமிழ்; நம் நாடு ஈழம்' என்னும் பதாகையினை உயர்த்திப் பிடித்தது.

■ ஈழப் போராட்டம் சர்வதேச ரீதியாக முற்போக்குப் பாட்டாளி வர்க்கம் நடத்துகின்ற போராட்டத்தின் ஒரு அங்கம் என்பதைத் தெளிவு படுத்தியதோடு ஆயுதம் தாங்கிய மக்களின் எழுச்சி ஒன்றே ஈழத்தின் விடிவைக் கொண்டுவரும் என்று எடுத்தியம்பியது.

இத்தகைய கருத்துக்களை முன்வைத்து அணிதிரட்டலை ஆரம்பிக்க 75 ஜனவரி 3ல் ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) ஈழவிடுதலைக் காகத் தன்னை வரித்துக் கொண்டது. ஆரம்பத்திலேயே சர்வதேச ரீதியாகப் போராடும் சக்திகளின் ஆக்கப்பூர்வமான ஆதரவையும் பெற்றுக்கொண்டு, தன் அரசியல் வேலைகளை ஈரோஸ் ஆரம்பித்தது மிகமிகக் குறைந்த அளவு ஆயுதங்களோடும், இமாலயத்தையொத்த நம்பிக்கையோடும், அசாத்திய துணிச்சலும், செய்து முடி அல்லது செத்துமடி என்ற ஆக்ரோசமான அர்ப்பணிப்பும் கொண்டு ஈழப் போராட்டத்தில் தடம் பதிக்கப் புறப்பட்டபோது எம்மை நோக்கிவந்த தடைகள் பலப்பல. 'ஏனடா தம்பி உங்களுக்கு இந்தவேலை' 'உருப்படுகிற வழியைப் பாருங்கோ' என்று இலவச ஆலோசனைகள் வழங்கிய பெரியார்கள் பலபேர். 'கறிக்குதவாத ஏட்டுச் சுரைக்காய்கள்' என்று கிண்டல் செய்தபடியே அவசர அவசரமாகக் களத்தில் இறங்கியோர் பலர். ஆயுத நடவடிக்கைகள் அற்ற அரசியல், நடைமுறையில்லாத சித்தாந்தம் என்று எம்மை ஏளனமாக விமர்சித்தவர் பலபேர். இலண்டனில் தலைமைப்பீடம் ஈழப் போராட்டத்தில் என்ன உருப்படியான பங்களிப்பை வழங்கும் எனக் குத்திக்காட்டிப் பேசியவர்கள் பலபேர். இப்படிப் பல கேள்விக்கணைகளுக்கும், விமர்சனங்களுக்கும், கேலிகளுக்கும், கிண்டல்களுக்கும் பதிலடி கொடுத்து மக்களுக்கு விடுதலைத்தாகத்தை ஊட்டி—போராட்டத்தில் நம்பிக்கையை விதைத்து; வளர்த்து எதிர்காலத்தினை எமதாக்கும் முயற்சியில் படிப்படியாக மெல்ல மெல்ல முன்னேறி வருகையில் எதிரியின் கவனம் எம்மீது திசை திரும்பியதால் பாரிய இழப்புகளையும் சோகங்களையும் தாங்கிக்கொள்ள வேண்டியவர்களாஞேம்.

ஆரம்பம் முதலே ஆயுதம் தரித்த அடாவடித்தனக்காரர்களின் ஆயுதமிரட்டலுக்கு மத்தியில் கொலை, கொள்ளைச் செயல்கள் போன்ற அராஜகமான மக்கள் விரோத நடவடிக்கைகளைக் கண்டித்தும், ஆயுதக்கிளர்ச்சிக்கும், பயிற்சி மோகத்திற்கும் அப்பால் மக்களை அரசியல் மயப்படுத்தும் பணியில் ஈடுபட்டோம். வெற்றிகண்டோம். கடந்த பத்தாண்டுகளாகச் செயற்பட்டு வரும் நாம் அரசியல் ரீதியாகப் பின்வரும் வெற்றிகளைக் கண்டிருக்கின்ருேம் என்பதனையிட்டு பெருமை கொள்ள முடியும்.

■ ஈழப்போராட்டம் என்பது பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் ஒரு அங்கம் என்பதால், மார்க்சிச—லெனினிய சித்தாந்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியதும் அதனை எமது மண்ணில் நடைமுறைப் படுத்துவதும் அத்தியாவசியமானது என அடித்துக் கூறினேம். இதனுல் இன்று அனைத்து போராளிகளுமே தவிர்க்க முடியாதவாறு சிவப்புச் சாயம் பூச நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர். போலியாக வேனும் தாமும் இடதுசாரிகள் தான் என்பதை உறுதிப் படுத்த வேண்டியவர்களாயுள்ளனர்.

■ மலையக மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண ஈழப் போராட்டமே வழிவகுக்கும் என முரசறைந்தோம். மலையக மக்களின் சிக்கல்களைத் தீர்க்க ஈழத்தின் ஏனைய பிராந்திய மக்கள் குரல் கொடுக்க வேண்டும்—போராட்டத்தில் ஒரு ஐக்கியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என எடுத்தியம்பினேம்—வெற்றி கண்டோம்.

■ ''நாம் ஈழவர்; நமது மொழி தமிழ்; நம் நாடு ஈழம்'' என்ற பதாகையினை உயர்த்திப் பிடித்து பிரதேச, மத வேறுபாடுகளுக்கப்பால் ஈழத்தில் வாழுமனைவரும் ஈழவரே எனக்கூறிய போது மக்கள் அணியணியாகத் திரள்வதைக் கண்டு வருகின்ருேப. எமது கருத்துக்களும், செயற்பாடுகளும் மக்கள் மத்தியில் பெரு வரவேற்போடு வேரூன்றி ஆழப்பட்டு அகலப் பட்டுவருவதனைக் காண்கிருேம்.

■ அடுத்ததாக, தற்பாதுகாப்புக் காரணங்களுக்காகவும், இராணுவத்தினரின் கவனத்தைத் திசை திருப்புவதையும் மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நடவடிக்கைகளின் ஊடாக, ஆயுதங்கள் பலவற்றைச் சேகரித்திருப்பதோடு மக்களுக்கு மக்கள்இராணுவத்தின் நடவடிக்கைகளில் நம்பிக்கை ஊட்டுவதிலும் கணிசமான அளவு வெற்றியைப் பெற்றிருக்கின்ருேம்.

■ ஈழப்போராட்டத்தில் இந்திய அரசிற்கும், தமிழகத்திற்கும் இருக்கக்கூடிய காத்திரமான பங்கைக் குறித்து தெளிவுடன் செயலாற்றுவதனுல், இந்திய அரசின் ஆக்கப் பூர்வமான ஒத்துழைப்புகளையும், ஒத்தாசைகளையும் பெற்றுக் கொள்வதிலும் பயன் தரும் வெற்றிகளைப் பெற்றுக் கொண்டிருக்கிருேம்.

இத்தகைய எமது வெற்றிகளைப் பற்றிப் பெருமைப்படும் அதேசமயம் எதிர்காலத்தில் எம்மீது சுமத்தப்பட்டிருக்கும் பாரிய பொறுப்புக்களையும் உணர்ந்து கொண்டிருக்கிருேம் என்பதை மக்கள் ஏற்றுக்கொள்கிருர்கள். இந்த நேரத்தில் இன்று எம்மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு ஏற்றவர்களாகவும் மக்களது எதிர்பார்ப்புகளையும் அபிலாசைகளையும் பூர்த்தி செய்யக்கூடியவர்களாகவும் பரிணமிக்கவேண்டியது அத்தியாவசியமானது. சுருங்கக் கூறின் எமக்குள்ள அதிகாரம் என்பது அராஜகத்தின் கருவியல்ல. மாருக நிர்வாக அமைப்புகளைச் சீர்படுத்தி ஒரு புதிய சமுதாய அமைப்பைப் படைக்க மக்கள் அளித்திருக்கும் நம்பிக்கையின் வெளிப்பாடுகள் என்றே கருத வேண்டும்.

ஈழமெங்கிலும் வாழும் மக்களின் நல்லெண்ணத்தையும், அபிமானத்தையும் பெற்றவர்களாக — ஈழப் போராட்டத்தின் தீர்மானகரமான சக்தியாய் பரிணமிக்க வேண்டிய நாம் அதற்கேற்ற வகையில் மிகவும் பொறுப்புணர்வுடனும், நிதானமாகவும் நடந்து கொள்வோமாயின் எதிர்காலம் எமக்காகும். இந்தவகையில் போராட்டத்தை முன்னெடுக்கும் வழிமுறைகள், எமது போராட்டதந்திரோபாயங்கள் குறித்தும் பின்னர் விரிவாக ஆராயலாம். ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### ஈழப்புரட்சியமைப்பு பணயம் வைத்துள்ள பிரித்தானிய பத்திரிகை ஆசிரியர்— உளவுத்துறையைச் சார்ந்தவர்

விபரங்களை இங்கு கோர்வையாக்கித் தந்துள்ளோம். இவை தொடர்ச்சியான விசாரணைகளின் பின்னரும் சரியான அணுகு முறைகளினூடாகவும் வெளிக் கொணரப்பட்டவை.

பெயர்: பெனிலோப் வினி ஈவா வில்லிஸ்
வயது: 64
தேசியம்: பிரித்தானியர்
கைது செய்யப்பட்ட இடம்: முல்லைத்தீவு
காலம்: 16-1-1986

**வருகைக்கான காரணங்களும் வெளிக்கொணரப்பட்ட தடயங்களும்:-**

அனைத்து வெளிநாட்டவர்களும் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு செல்வது முற்ருகத் தடை செய்யப்பட்ட போதும் அரசாங்க அனுமதியுடன் இவர் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேகத்துக்கிடமான பகுதிகளில் நடமாடத் தொடங்கிய தனை இட்டு இவர் ஈழப்புரட்சி அமைப்பினுல் கைது செய்யப்பட்டார்.

கடந்த செப்டெம்பர் மாதம் ஜனதிபதி ஜே. ஆரின் மருமகள் பெனி ஜெயவர்த்தனவின் வீட்டில் நடைபெற்ற ஒரு விருந்தில் இப் பெண்மணி கலந்து கொண்டுள்ளார். இவ் விருந்தில் 'வைற்,, 'போர்பஸ்' என்ற இரு பிரித்தானிய உளவுத் துறையைச் சார்ந்தவர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

திருமதி வில்லிஸிடம் கைப்பற்றப்பட்ட உடமைகளில் ஸ்ரீலங்கா உளவு ஸ்தாபனமான (NIB) தேசிய உளவு ஸ்தாபனத்தின் உதவி ஆணையாளரது அடையாள அட்டை கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன் கடந்த மே, ஆகஸ்ட் மாதங்களில் இவர் இலங்கைக்கு வருகைதந்துள்ளார். மேலும் இவர் சைப்பிரஸ்ஸில் 1956-1960 ஆண்டுக் காலங்களில் ரேயல் யுனைட்டட் சேவிஸ் இன்ஸ்ரிரியூட் என்ற பாதுகாப்பு நிறுவனத்திற்காக பணியாற்றியமை தெரியவந்துள்ளது. இந்த ரேயல் யுனைட்டட் சேவிஸ் இன்ஸ்ரிரியூட் லண்டனில் அமைந்துள்ள MI 5 என்ற உளவு ஸ்தாபனத்தின் முக்கிய அமைப்பாகும். மேலும் இவர் வெளியிட்டுள்ள தகவல்களின் படி, இவர் பல பத்திரிகைகட்கு எழுதிய எந்தவிதமான கட்டுரைகளும் வெளியாகவில்லை என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

### ஈழப்புரட்சி அமைப்பின் கோரிக்கை

16-1-86 இல் கைது செய்யப்பட்ட திருமதி வில்லிஸினை விடுதலை செய்வதற்கு எமது அமைப்பு முன் வைத்துள்ள கோரிக்கைகள் ஸ்ரீலங்கா அரசிற்கு பெரும் அதிர்ச்சியினை கொடுத்துள்ளது. கடந்த வருடம் முதல் அனுமதி மறுக்கப்பட்டிருந்த சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினரிடம் மாத்திரமே இப்பெண்மணியை விடுவிப்பதாக விடுத்த கோரிக்கையை ஆரம்பத்தில் ஸ்ரீலங்கா அரசு மறுத்துவிட்டது. ஆனுல் தொடர்ச்சியான முயற்சிகளின் பலனுக செஞ்சிலுவை சங்கத்தின் பிரதிநிதி சந்திர சிங்கரும் பிரித்தானிய அரசின் பிரதிநிதியும் திருமதி வில்லீசை பொறுப்பேற்பதற்கு ஈரோஸ் இணக்கம் தெரிவித்தது காரணமாக கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டமையும், இவரது வயது கருதியும, மனித நேயத்தில் கொண்ட நம்பிக்கையாலும் இவர் விடுவிக்கப் படுகிருர்.

## இன்னுயிர் ஈந்தும்...

### நீங்கள் வீழ்த்தப்பட்டவர்களல்ல விதைக்கப்பட்டவர்கள்

தோழர்களின் மறைவில் துயருறும்இதயங்களுடன் இணைந்து துயரைப் பகிர்ந்து கொள்கிருேம். ஈழத்து விடியலுக்காக விதைக்கப்பட்டுவிட்ட உங்களுக்கு ஈழப்புரட்சி அமைப்பு தனது வீரவணக்கத்தைச்செலுத்திக் கொள்கின்றது.



தோழன் விஜயரஞ்சன் (குட்டி)

### தோழன் குழந்தை

விசுவமடுவில் ஹெலிகப்ரரில் வந்திறங்கிய இராணுவத்தினரின் வெறித்தாக்குதலுக்குப் பலியானவர்களுள் ஒருவரான தோழன் குழந்தையை நாம் இழந்தோம். இச்சம்பவம் 2-10-85 அன்று நிகழ்ந்தது. எல்லோருடனும் எளிமையாகப் பழகும் தன்மை கொண்ட இவன் விசுவமடு தொகுதிக்குழு உறுப்பினுக தனது பணியினை ஆற்றி வந்தான். துயரம் தோய்ந்த இதயத்துடன் இவனது நினைவை நெஞ்சிற் பதித்து வீரவணக்கம் செலுத்துகிருேம்



தோழன் பார்த்திபன்

### தோழன் சுந்தரமூர்த்தி

தோழன் சுந்தரமூர்த்தி இயக்கச்சியை பிறப்பிடமாகக் கொண்டவன். 3-12-85 அன்று ஆனையிறவு முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவம் பளையில் நடத்திய வெறித்தாக்குதலுக்குப் பலியாகினுன். கடமைகளில் ஆர்வமும், செயல் திறனுமிக்க தோழன் சுந்தரமூர்த்தி கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக இயக்கத்தில் இணைந்து வேலை செய்து பயிற்சியும் பெற்றவன். இவன் எடுத்துவைத்த அடிச்சுவடுகளின் பயணத்தை தொடரும் உறுதியுடன் அவனை இழந்த துயரத்தை பகிர்ந்து கொள்வோம்.

### தோழன் விஜயரஞ்சன் (குட்டி)

எமது போராட்ட வாழ்வில் 12-12-85 அன்று தோழன் விஜயரஞ்சன் (குட்டி), தோழன் பார்த்திபன் (கண்ணன்) ஆகிய இருவரையும் இழக்க நேரிட்டுள்ளது. இழப்புகள் ஈடுசெய்யப் பட முடியாதவை. ஆனுல் உங்கள் பணிகளை முன்னெடுப்போம்.

தோழன் விஜயரஞ்சன் எமது இயக்கத்தின் இராணுவப் பணியில் பல முக்கியம் வாய்ந்த தாக்குதல்களில் இணைந்திருந்தான். தனது தொழில் நுட்பத் திறமையால் ஸ்ரீலங்கா அரசு திகைக்கும் வண்ணம் சில தாக்குதல்களை நடத்தி முடித்தான். தனது வெளிநாட்டு வாழ்க்கையை உதறி தள்ளிவிட்டு 1983ம் ஆண்டுப் பகுதியில் முழுநேரப் போராளியாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டான்.



தோழன் சுரேஷ்

12-12-85 அன்று, இன்றைய பாசிச வெறியன் 'ஜியா உல்ஹக்'இன் வருகையை எதிர்த்து எமது இயக்கம் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையை வெற்றிகரமாக நிகழ்த்தியபோது இவனை இழக்க நேரிட்டது. தோழர்களின் இதயத்தை வென்றுவிட்ட இவனுல், மரணத்தை பல தடவை வெற்றிகொள்ள முடிந்திருந்த போதும் இந்தத் தடவை மரணம் அவன் உடலை வென்றுவிட்டது.



தோழன் விஜயரட்ணம்

### தோழன் பார்த்திபன் (கண்ணன்)

12-12-85 அன்று எமது இயக்க இராணுவ நடவடிக்கையை முழுமையாக நிறைவேற்றிய பின்னர் ஏற்பட்ட தற்செயல் நிகழ்வொன்றில் இவனை இழந்தோம். மட்டக்களப்பு பிராந்தியத்தில் முக்கியமான இயக்க வேலைகளை சிறப்பாக மேற்கொண்டு வந்தான். 1983ம் ஆண்டு ஈழப்போராட்டத்துடன் இணைந்து எமது அமைப்பில் செயற்பட்டு வந்தான் . இவன் மரணத்தின் போது தோழன் விஜயரஞ்சனுடன் இணைந்து கொண்டான்.

### தோழன் சுரேஷ்

தென் ஈழப்பகுதியிலமைந்த மூதூர் பிராந்தியத்தினை தனது பிறப்பிடமாகக் கொண்ட தோழன் சுரேஷ் எமது அமைப்புடன் 1980ல் தன்னைப் பூரணமாக இணைத்துக் கொண்டான். முக்கிய பல இயக்கப் பணிகளை ஏற்று முன்னெடுத்துச் சென்ற தோழன் சுரேஷ் இராணுவத்தின் சூட்டுக்கு இலக்கானுன். தொடர்ச்சியாகத் தாக்குண்ட தன்பிராந்திய மக்களுக்காக மாத்திரமல்லாது ஈழவிடுதலையை நேசித்த இவன், தோழர்களின் இதயங்களில் மட்டுமல்லாது தமிழக-ஈழ நண்பர்களின் இதயங்களிலும் நிறைந்திருந்தான். தமிழகத்தில் ஈழ நண்பர்களின் அஞ்சலிக் கண்ணீரால் வடிக்கப்பட்ட துண்டுப் பிரசுரம் இதன் வெளிப்பாடாகும். இராணுவத்தின் வீழ்த்தப்பட்ட எண்ணிக்கையில் ஒன்ருக நீ சேர்க்கப்பட்டாய். ஆனுல் எமக்கு நீ என்றும் வீழ்த்தப்படவில்லை.

### தோழன் விஜயரட்ணம்

மரணம் நிச்சயமானது.

ஆனுல் இவ்வளவு விரைவில் ? நீ உன்னை இணைத்துக்கொண்ட பின்னர், உனது மனைவியை, அதன் பின்னர் உனது தங்கையை........

ஈழவர் போராட்டத்துடன் இணைத்துக் கொண்டாய். நாங்கள் சொல்வோம் முதலில் உனது குடும்பத்தை வென்று விடு என்று .......

இலக்கணமாய் அமைந்த உன்னை இழந்து விட்டோம்.

போராட்டத்தை பற்றி சரியான கண்ணேட்டத்தை பெற்றுக்கொள்வது போராட்டத்தில் பங்குபற்றுவதைவிட முக்கியமானது. உண்மையான தத்துவ விளக்கத்தை பெற்றுக்கொண்டால் உலக அரசியலில் மிக சிக்கலாக தென்படும் விடயங்கள் எல்லாம் மிக எளிதாக, ஒன்றுடன் ஒன்று தொடர்பு பெற்று விளங்குவதை புரிந்து கொள்ளலாம். இவற்றை மக்களுக்கு விளக்குதலும் புரிய வைத்தலுமே பெரிய பணியாகும், ''கருத்து மக்களைப்பற்றிக் கொண்டால் சக்தியாக உருவெடுக்கும்'' என்று தோழர்கள் சொல்லித் தந்தனர். எமது ஆசைகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் இடம் கொடுப்பதன் மூலம் சாதாரண வாழ்க்கை ஒன்றையே நாம் ஈட்ட முடியும். வெற்றியை நோக்கிச் செல்வோம். அதன்பின் சக்தியையும் உண்மையையும் முறையே பரிசோதித்து பார்த்துக் கொள்வோம்.

இவை நீ, உன் மனைவிக்கு எழுதிய கடிதத்தின் சில வரிகள்

தோழன் விஜயரட்ணம் வெளிநாடுகளில் எமது இயக்கப் பணிகளை உணர்வு பூர்வமான ஈடுபாட்டுடன் நிறைவேற்றி வந்தார். குறுகிய காலத்தினுள் எமது தோழர்களின் இதயத்தை வென்றுவிட்ட தோழன் விஜயரட்ணம், தன்னை முற்ருக அர்ப்பணிக்க முனைந்த வேளையில், இயற்கை மரணம் அவரை தழுவிக்கொண்டது.

## பெனிலோப் விடுதலை!

ஈரோஸ் அறிக்கை

பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த பெனிலோப் வில்லிஸ் (வயது 64) செவ்வாய் 18-2-86 அன்று யாழ்ப்பாணத்துக்கு அருகே உள்ள அகதிகள் முகாம் ஒன்றில் விடுதலை செய்யப்பட்டார். இது தொடர்பாக ஈரோஸ் விடுத்த பத்திரிகை அறிக்கையின் விவரம் பின் வருமாறு:

பெனிலோப் வில்லிஸ் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் மற்றும் பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகள் ஆகியோரிடம் நேரடியாக ஒப்படைக்கப்பட்டார். இவ்வாறு அவர் ஒப்படைக்கப்பட்ட போது செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஈழப் போராட்டம் பற்றியும், சொந்த மண்ணிலேயே அகதிகளாகியுள்ள தமிழ்மக்களின் பரிதாபகரமான நிலை பற்றியும், மற்றும் தேவையான உதவிகள் பற்றியும் அறிக்கைகள் கொடுக்கப்பட்டன.

மேலும் இவ்வறிக்கையில், பிரிட்டன் உளவு நிறுவனமான எம். ஐ. 5 என்ற அமைப்பு சார்பில், இயக்கங்கள் பற்றி நேரடியான அறிக்கை கொடுப்பதற்காகவே பெனிலோப் அனுப்பப்பட்டுள்ளார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. எனினும் மனிதாபிமான அடிப்படையிலும், தமிழ் அகதிகளை பிரிட்டன் பராமரித்து வருவதற்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும் இவர் விடுதலை செய்யப்பட்டார். ஆனுல் எதிர்காலத்தில் இது போன்ற உளவு வேலைகளில் ஈடுபடுவோருக்கு எமது அமைப்பு நடை முறைக்கு ஏற்ப புரட்சிகர அடிப்படையிலானநீதிமன்றத்தின் தீர்ப்பினையே அமுல் படுத்த வேண்டி வரும் என எச்சரிப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

**எச்சரிக்கை**

ஈழப்போராட்டத்தில்இவ்வாருன எதிர்ப்பாளர்களுக்கும்நாச சக்திகளுக்கும் எச்சரிக்கை ஒன்றினை ஈழப்புரட்சி அமைப்பு விடுக்கிறது. இவ்வாருன நிகழ்வுகளில் இவர்கள் தொடர்ந்து ஈடுபடுவார்களாயின் எவ்வித மன்னிப்புமின்றி புரட்சிகர நீதிமன்றத்தின் தீர்ப்பினையே செயல் படுத்துவோம்.

### சென்னையில் ஸ்ரீலங்கா சுதந்திர தினத்திற்கு எதிர்ப்பு

### மாணவர் இளைஞர் பொதுமன்றம்:-

04-02-86 அன்று சென்னையில் தமிழர் நல மருத்துவ அமைப்பினுல் (Must) ஒழுங்கு செய்யப்பட்ட நிதியுதவி கலை நிகழ்ச்சியொன்றின் போது ஸ்ரீலங்கா சுதந்திரதினத்தை 'கறுப்பு நாளாக' பிரகடனப் படுத்தும் துண்டுப்பிரசுரத்தை மாணவர் இளைஞர் பொது மன்றம் (Guys) வெளியிட்டு விநியோகம் செய்தது. இந் நிகழ்ச்சியின்போது ஸ்ரீலங்கா அரசினைக் கண்டிக்கும் வகையிலும், ஈழப்போராட்டத்தினை ஆதரிக்கும் வகையிலான வாசகங்கள் எழுதப்பட்ட ஆடைகளுடன் இத்தினத்தில் தமது துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டனர். குறிப்பிடத்தக்க துண்டுப்பிரசுரத்தில்இந்த கரிய மாசி 4ம் நாள் — தமிழ் பேசும் மக்களின் புதிய எழுச்சி'' என்ற தலைப்பில் எமது பறிக்கப்பட்ட சுதந்திரத்தின் வித்தே அந்த மாசி 4ம் நாள் என விளக்கப்பட்டுள்ளது. இது ஒரு புதிய பிரச்சார வடிவமாக பலராலும் விமர்சிக்கப்பட்டது.

## ஈழத்தமிழரின் அவலநிலை பற்றி ஐ. நா. சபையில் இந்தியா விளக்கம்

இலங்கையில் இடம்பெற்று வரும் இனப் படுகொலைகள் காரணமாக தமிழ்நாட்டிற்கு அகதிகளாகவந்து சேர்ந்துள்ள தமிழ் மக்களின் 'துன்பநிலையினை இந்தியா ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளது. தமிழ் நாட்டில் ஒருலட்சத்திற்கும் அதிகமான தமிழ் அகதிகளுக்கு புகலிடம் வழங்கியிருப்பதால் இந்தியா எதிர் நோக்கும் பிரச்சனைகள். நெருக்கடிகள் பற்றி ஐ.நா. பொதுச்சபையின் மனித உரிமைக் குழுவிடம் இந்தியப்பிரதிநிதியான ராஜ்ய சபை உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் எடுத்துக் கூறியிருக்கிருர். இலங்கை இனப் பிரச்சனையில் ஏற்புடையதானதொரு தீர்வொன்று ஏற்படத் தேவையான இராஜதந்திர உதவிகள் இந்தியா செய்து வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

www.tamilarangam.net

# தென்னிலங்கை இடதுசாரி நண்பனுக்கு

• 'நண்பா! மிகவும் நெருக்கடிமிக்கதொரு சூழ்நிலையில் இக் கடிதத்தை எழுத வேண்டிய கட்டாய நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறேன் என்பதனைப் புரிந்து கொள்வாய் என நம்புகின்றேன். கடிதத்தைத் தொடருமுன் முகம் தெரியாத உனக்கு என்னை அறிமுகம் செய்ய வேண்டியது என் கடமை அல்லவா ? நானும், என் சக தோழர்களும், ஈழத்தை மீட்டெடுத்து அங்கே ஒரு சமத்துவ, சமதர்ம, சமுதாய அமைப்பொன்றை நிறுவ வேண்டும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டவர்கள். ஈழத்தின் விடுதலைப் போராட்டமென்பது சர்வதேச ரீதியாக முற்போக்குப் பாட்டாளிவர்க்கம் நடத்தும் போராட்டத்தின் ஒரு அங்கமே என்ற தெளிவோடு பாசிச சர்வாதிகாரத்தை அமுல் நடத்தும் ஜே. ஆர். ஜயவர்த்தன அரசாங்கத்தை மூர்க்கமாக எதிர்த்து வருபவர்கள். ஆயுதம் தாங்கி நாங்கள் நடத்தும் போராட்டம் உனக்கு மகிழ்வு அளிப்பதாகவும் ஆனால்—எம்மைச் சந்தித்து எமது கருத்துக்களைப்பகிர்ந்து கொள்ளமுடியாத துர்பாக்கியம் உனக்கு இருப்பதாகவும் வேதனைப்பட்டிருப்பதாய் நான் அறிகிறேன்.


நண்பா! எம்மைப் பற்றி ''மார்க்சிய பயங்கரவாதிகள்'' என்று விமர்சிக்கப்படுகின்ற நேரங்களில் மார்க்சிய—லெனினியம் இந்த மண்ணில் அமுல் நடத்தப்படுவது நிச்சயமே—ஒரு சமத்துவச் சமுதாயம் படைக்கப்படுவது சத்தியமே என எண்ணிக் குதூகலப்படும் அதே வேளை ஈழத்து மார்க்சிஸ்டுகள் மட்டும் இன வெறியர்களாய்—இனவாதிகளாய் இருப்பதனையிட்டு விசனப்படுவதாகவும் அறிகிறேன். இது உண்மையானால் உனக்கு பதில் சொல்ல வேண்டியது என் கடமையே.

நாங்கள் இனவெறியர்களோ—அல்லது இன உணர்ச்சிகளைத் தூண்டி மோதவிட்டுப் பார்க்கும் மானுட விரோதிகளோ அல்ல. அம்பாந்தோட்டையில் மீன்பிடிக்கும் அப்புகாமியும்—பேசாலையில் மீன்பிடிக்கும் பொன்னையாவும் வர்க்க உணர்வோடு அணிதிரட்டப்பட்டு முதலாளித்துவத்தை முறியடிக்க வேண்டும். பாணந்துறையில் இருக்கும் பண்டாவும், பண்டத்தரிப்பில் இருக்கும் பழனியப்பாவும் பஞ்சத்தைப் போக்கும் போராட்டத்தில் பங்கு பெற வேண்டும் எனத்தான் நாமும் எதிர்பார்த்திருந்தோம். ஆனால்—பிரித்தாளும் முதலாளிய தந்திரத்தின் சதிவலைக்கு உள்ளாக்கப்பட்டு—கலவரங்கள் மூலமும் காடைத்தனங்கள் மூலமும் எமது மக்கள் அழித்தொழிக்கப்பட்டு வரும் நிலைகண்டும் நாம் மௌனிகளாகி இணைந்த புரட்சி பற்றிக் கற்பனை பண்ணுவது எப்படிச் சாத்தியமாகும்...? மேலும் பழைய வரலாறுகளைப் புரட்டிப் பார்க்கும்போது பாராளுமன்றக் கதிரைகளுக்கு ஆசைப்பட்ட இடதுசாரி அரசியல்வாதிகள் எமது மக்களைக் கைவிட்டுவிட்ட படலங்கள் எமக்குப் பாடமாய் அல்லவா அமைந்து கிடக்கின்றது. ''ஒரே மொழியானால் நாடு இரண்டாகும்'' என முன்னுணர்ந்து கூறிய சிங்கள இடதுசாரிகளே ''வடேதோசே அப்பிட்ட எப்பா'' என்று கூறி எமது முகத்திலறைந்தபோது எம்மால் என்ன செய்ய முடியும் என்பதனை ஒரு கணம் எண்ணிப் பார் நண்பா ! இதுவெல்லாம் இடதுசாரி முகமூடியணிந்த போலிகள் என்று கூறி ஒதுக்கி விடலாம் என்கிறாயா? அப்படியானால்—இவர்களிடமிருந்து மாறுபட்ட சிந்தனைகளோடு ஆயுதம் தாங்கிய கிளர்ச்சியை முன்னெடுக்க முனைந்த ஜனதா விமுக்தி பெறமுனையும் எம்மவரைக் கைகழுவி விட்டுத்தானே போராட்டம் நடத்த முயற்சித்தது. 71 கிளர்ச்சிக்கால கட்டத்தில் 15,000க்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்களை அணி திரட்ட முடிந்த ஜே.வி.பி.யினர் இலங்கைத் தீவின் வடக்கிலும், கிழக்கிலும் வாழ்ந்த மக்களின் நலன்களை எப்படித்தான் பிரதிபலித்தார்கள்? இவ்வாறாகக் காலம் காலமாக எமது மக்களை முதலாளிய அமைப்பு மட்டுமன்றிப் புதிய சிந்தனை கொண்ட இடதுசாரிகளும் கூட ஒதுக்கி வைக்க, என்ன காரணமாக இருக்க முடியும் நண்பா...? இனவாதத்தில் ஊறிப் போயிருப்பது நீங்களும் உங்களது பிரதிநிதிகளுமா அல்லது நாங்களா என்பதைத் தயவுசெய்து ஒரு கணம் எண்ணிப்பார் நண்பா!

இவையெல்லாவற்றையும் பழைய குப்பைக் கூடையிலே வீசியெறிந்துவிட்டுப் புதிய சரித்திரம் படைக்கலாம் புறப்படு என்கிறாயா? தயவுசெய்து பொறுத்துக்கொள். எமது மக்களின் சார்பில்—நான் ஆத்மார்த்தமாக நேசிக்கும் மானுடத்தின் பேரில் உன்னிடம் சில கேள்விக் கணைகளைத் தொடுக்க விரும்புகிறேன். பதில் சொல்வாய் என்ற எண்ணத்தில் கடந்த காலத்தின் தடம் பதிந்த சுவடுகளால் நாங்கள் காயப்பட்டிருக்கின்றோம். இனவாதச் சக்தி எமது முகங்களின்மேலே வீசியெறியப்பட்டு நாங்கள் வீழ்ந்து கிடக்கின்றோம். இந்த இனவெறி அடக்குமுறையில் இருந்து நாங்கள் விடுபட்டாக வேண்டும். இனவெறியே இராணுவமாகிப் போனதால் கொடூரத் தாண்டவமாடுவதை எம்மால் பொறுத்துக் கொள்ள முடியாது. நண்பா! அதனால் நீ மானுடத்தை நேசிப்பது உண்மையானால்—உனது கடந்த காலத் தவறுகளை உள்ளார்த்தமாக உணர்வது உண்மையானால்—இழந்த மானுட மேன்மையை மீட்பதற்கான உனது போராட்டத்தை உடனேயே ஆரம்பி. எம்மவரையும் மானுடர்களாக—மக்கள் கூட்டமாக—ஆம்! ஒரு தேசிய இனமாக சுயநிர்ணய உரிமையை—எமது விடுதலையை எவ்வித முன் நிபந்தனையுமின்றி ஆதரி. எனக்கும் உனக்கும் பொது எதிரி ஒன்றேதான் என நீ கருதுவது உண்மையானால்—அந்தப் பொதுஎதிரிக்கு எதிரான மூர்க்கமான போரை உடனே தொடங்கு. அப்போதுதான் நாங்கள் சந்திக்கலாம். எமது கரங்களைக் குலுக்கிக்கொள்ளலாம்.

மே 14, 1985 இன் நிகழ்ச்சிகளை—ஆம்! அனுராதபுரப் படுகொலைகள் பற்றி நீ ஆழ்ந்து கவலைப்பட்டதாய் தெரிகின்றது. நண்பா! யாரால் செய்யப்பட்டது என்பது தெளிவாகாத நிலையில் என்ன நோக்கத்திற்காக செய்யப்பட்டிருக்கலாம் என்பதைக் கூறுவதில் இருக்கக் கூடிய சிரமம் உனக்குத் தெரியாதல்ல. ஆனால்—இந்த சம்பவத்தின் பின்னால் ஒருவித இனவெறி இருப்பதாய் ஆத்தப்படுத்துவது அவ்வளவு நல்லதல்ல. ஏனெனில் எமது மண்ணில் தினசரி நடக்கும் கொடூரங்களை கணவனை இழந்த கைம் பெண்ணின் நிலையை—பெற்றோரை இழந்த பாலகரை, இளைஞர்களை இழந்து ஆற்றாமையில் தவிக்கும் வயோதிபரின் நிலையை—உன்னைப் போன்றவர்களுக்கு உணரவைக்க அவர்களுக்கு வேறு வழி தெரியவில்லைப் போலும். ஆனால்—ஒன்றுமட்டும் நிச்சயம். நீயும் உன்னைப் போன்ற சிந்தனை படைத்த நியாயவாதிகளும் உக்கிரமான போராட்டத்தை ஆரம்பித்து, நீங்கள் உண்மையாகவே நேசிக்கும் அந்த மக்களின் பிரதிநிதிகள் என்ற அந்தஸ்தைப் பெற்று எந்தஅளவு சீக்கிரத்தில் அரசுக்கு எதிரான ஒரு மாற்றுக்கருத்தை முன்வைக்கிறீர்களோ—அவ்வளவு விரைவில் இனப்பிரச்சனையும் தீரக்கூடும். அநியாயப் படுகொலைகளும் தவிர்க்கப்படக் கூடும் என்பதைப் புரிந்துகொள். மேலும் காலம் தாழ்த்துவது நிர்ப்பந்தங்களுக்கே இட்டுச்செல்லும் என்ற எச்சரிக்கையோடு விடைபெற ஆசைப்படுகின்றேன்,

என்றென்றும் நட்புரிமையுடன் போராடும் தோழன்



## பொதுமை கூறும் ஆலோசனை

ஒவ்வொரு போராளியும் மக்களுக்காக குறிப்பாக வயதான பெற்றோர்களுக்கு சுமையாக மாறிவிடக் கூடாது என்று குறிப்பிடும் வசனங்கள் உண்மையிலேயே ஒவ்வொரு விடுதலை இயக்கங்களின்-போராளிகளின் நெஞ்சங்களிலே ரீங்காரம் இடவேண்டியவை.

இன்றைய ஈழவிடுதலைப் பாதையில்—இடர்ப்படும் இளைஞர்களுக்கு அமுதமான ஆலோசனை, பொதுமக்களின் பணத்தை செலவிடும் போது மிகவும் அவதானமாகவும்—சிக்கனமாகவும் — பொறுப்புணர்வுடனும் செலவிடப்பட வேண்டும் என்னும் பொறுப்பான வசனங்களும் பெறுமதியானவை.

தோழர்கள் உற்பத்தியில் ஈடுபடுவதும் குறிப்பாக வெளி மாவட்டங்களில் இருந்து வரவழைக்கப்படும் உற்பத்திப் பொருட்களை எமது பிரதேசங்களிலேயே உற்பத்தி செய்ய வேண்டுமென்பதும் வரவேற்கப்படவேண்டியதே.

ஆலோசனைகள் மணியானவை. ஏற்றுக் கொள்கின்றோம்.

ஆனால் ?!

## என்னைக் கவரும் பொதுமை

ஈழப்புரட்சி அமைப்பின் மாதாந்த இதழான பொதுமை ஏட்டின் இரண்டாவது மலரின் பன்னிரண்டு இதழ்கள் மலர்ந்துள்ளன. ஈழவிடுதலைப் போருக்காகத் தன்னை முற்றாக அர்ப்பணித்துள்ள ஓரியக்கத்தின் ஏட்டில் பேச்சு வார்த்தை பற்றிய செய்திகளுக்கு முக்கியமற்ற இடமே வழங்கப்பட்டிருக்கும் என்றஎதிர்பார்ப்போடு பொதுமை இதழ்களைப் பார்க்கும்போது ஏமாற்றமே தோன்றுகிறது. ஆறு இதழ்களில் பேச்சு வார்த்தை பற்றிய செய்திகளே கண்ணை உறுத்திக் கொண்டு முதற்பக்கங்களில் காட்சி தருகின்றன. ''நீயுமா புரூட்டஸ்...'' என்று கேட்கும் ஆத்திரம் ஏற்படுகிறது. இராமநாதன் முதல் அமிர்தலிங்கம் வரை எல்லோரும் ஏறி விழுந்த குதிரையில் இவர்களும் ஏறிச் சறுக்கிவிழப் போகிறார்களா? என்ற ஐயமும் வெறுப்பும் தோன்றுகின்றன. ஈழத்தேசிய விடுதலை முன்னணி ''இந்திய அரசின் நிர்ப்பந்தத்தினால் கலந்து கொண்டிருக்கும்போதும் பேச்சுவார்த்தையால் எவ்வித ஆக்கமும் ஏற்படப் போவதில்லை'' என்று பிரகடனம் செய்தது. இந்தப் பிரகடனத்தை மக்களுக்கு உணர்த்துவதும் பேச்சுவார்த்தையால் வாழ்வு மலரும் என்ற மாயை மக்கள் உள்ளத்தில் புகுந்து விடாது காப்பதுமே கட்டுரைகளின் நோக்கம் என்பதை உணரும்போது நிம்மதி ஏற்படுகிறது. ''எங்கடை பெடியள் பிழை விடாங்கள். அவங்களை ஆரும் அழாப் பேலாது'' என்ற நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால் இந்த நம்பிக்கை நிலைக்குமா....?

இயக்கங்களுக்குள் மோதல், இயக்கங்களுக்கிடையே மோதல், கொள்ளை, ஆட்கடத்தல் இவை பற்றிய செய்திகள் பொதுமையில் குறிப்பிடத்தக்க இடத்தை நிரப்புகின்றன. இளம் பிள்ளைகள் வேளாண்மைக்குப் புறப்பட்டிருக்கிறார்கள் விடுதலை என்ற நெல் வீடு வந்து சேருமா...? என்ற ஐயம் துளிர்க்கிறது. இந்த எமது ஐயம் எமக்கு மட்டும் உரியதல்ல என்று பறைசாற்றுவது போல் இயக்கத்துக்கு இரு பிள்ளைகளை அளித்த அன்னையின் ''இயக்கச் செல்வங்களே, எனக்கு என் மகன் வேண்டும். அவனை என்னிடம் ஒப்படைத்து விடுங்கள்'' என்ற தீனக்குரல் பொதுமையில் (2:11) கேட்கிறது. பார்வையாளர் வேண்டாம் பங்காளராகுங்கள் என்ற குரல் ஓங்கி ஒலிக்கவேண்டிய கட்டத்தில் ''என் மகனை என்னிடம் விட்டுவிடுங்கள்'' என்ற வேதனைக் குரல் — அவநம்பிக்கைக் குரல் ஒலிக்க வேண்டுமா? ஒலிக்கலாமா ..? இவை அனைவரும் உணர்ந்து பதில் கூற வேண்டிய வினாக்கள்.

பொதுமையில் என்னைப் பெரிதும் கவரும் அம்சம் நான்காம் பக்கத்தில் இடம் பெறும் ஆசிரியர் கருத்துக்கள். ஆழமான கருத்துக்கள் நிதானமான முறையில் இங்கு எடுத்துரைக்கப்படுகின்றன. ஏனைய பக்கங்கள் பெரும்பாலும் ஒரு செய்திப்பத்திரிக்கையின் தரத்தில் அமைய இப் பகுதி மட்டும் விடுதலை வரலாற்றின் பொன்னேடுகளாக விரிகின்றன ஒரு விடுதலைப் போராட்ட இயக்கத்தின் செய்தி ஏட்டில் இத்தகைய கருத்துக்களையே மக்கள் அதிகம் எதிர்பார்க்கின்றனர். இக் கருத்துரைகளின் பெறுமதி காரணமாகப் பொதுமை இதழ்கள் காலந்தோறும் போற்றப்படும்.

பொதுமை போன்ற ஓரேட்டில் கனமான அரசியல்—வரலாறு மதிப்பீட்டுக் கட்டுரைகளே பெரும்பாலும் எதிர்பாக்கப்படுகின்றன. ஆனால், பொதுமையில் அவை அரிதாக இருப்பது ஏமாற்றத்தையே தருகிறது.

பொதுமையின் ஆரம்ப இதழ்களில் 'ஒற்றுமை' பற்றிய கருத்து ஓங்கி ஒலிக்கிறது. ஆனால்—இதழ் எண்கள் அதிகரிக்க அதிகரிக்க ஒற்றுமைக் குரல் பலவீனமடைவது தெரிகிறது.

# ஒன்றுபடுவோம் போராடுவோம்

—ஈரோஸ் அறிவிப்பு

கடந்த காலங்களில் தமிழ் பேசும் மக்களாகிய எமக்கு ஸ்ரீலங்கா அரச பயங்கரவாதிகளினால் இழைக்கப்பட்டுவரும் தொடர்ச்சியான அக்கிரமங்கள் ஈழத்தின் பல பாகங்களிலும் இடம்பெற்று வருகின்றன.

அண்மையில் மூதூர்ப்பிராந்தியத்தில் உள்ள கிராமங்கள் பலவும் அரச பயங்கரவாதிகளால் முற்றாக அழித்தொழிக்கப்பட்டபோது பல்லாயிரக் கணக்கான மக்கள் அகதிகளாகவும், நூற்றுக்கணக்கான மக்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டும் உள்ளார்கள். இவர்களின் அராஜகம் தற்போதும் தொடர்ந்து கொண்டே வருகின்றது. இன்றைய நிலையில் தமிழ் பேசும் மக்களாகிய இஸ்லாமிய மக்களும் வேறுபாடின்றி அதேமுறையில் திட்டமிட்டு அழிக்கப்படுவதற்கு உதாரணமாக கடந்த செப்டெம்பர் 29 அன்று மூதூர் இராணுவ முகாமின் முன்பாக ஜனுப் இஸ்மாயில் என்பவர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். தொடர்ச்சியாக 14—10—85 அன்றும் மூதூரைச் சேர்ந்த அப்பாவி இஸ்லாமியர்கள் மல்லிகைத் தீவுக்கண்மையில் தொழிலுக்காகச் சென்ற போது இராணுவத்தினரால் முற்றுகையிடப்பட்டார்கள். தம்மை முஸ்லீம்கள் என இனங்காட்டிக்கொண்ட போதிலும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கோரமான முறையில் அவர்களைச் சுட்டுக் கொன்றுள்ளார்கள். இதனை ஸ்ரீலங்கா வானொலி தமது செய்தியில், பொய்ப்பிரச்சாரம் செய்வதற்கென்றே உருவாக்கப்பட்ட ''லங்காபுவத்தை'' ஆதாரங்காட்டி, ஈழப்போராட்டத்தில் இருந்து இஸ்லாமியரை அந்நியப்படுத்தும் நோக்கோடு திரித்துக் கூறியுள்ளது. ஆனால் இப்படுகொலைகளுக்கு முற்றாக ஸ்ரீலங்கா இராணுவத்தினரே பொறுப்பானவர்கள் என்பது வெளிப்படை.

இந்நிலையில் மூதூர்ப்பகுதி வாழ் தமிழ் பேசும் மக்கள் கடையடைப்பு, ஹர்த்தால் போன்ற எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை வரவேற்கத்தக்க வொன்றாகும். ஈழத்தில் அரச பயங்கரவாதிகளின் அட்டூழியங்கள்தொடர்ந்தும் நிகழவிருக்கின்றன என்பது வரலாறு கற்பித்த பாடமாகும். எனவே தற்போது மேற்கொள்ளப்படும் எதிர்ப்பு நடவடிக்கை வெறும் உணர்ச்சி பூர்வமானதாகவன்றி எதிர்காலத்தை மனதில் கொண்ட உணர்வு பூர்வமான எதிர்ப்பு நடவடிக்கையாக இருப்பதோடு, ஈழத்தில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களாகிய நாம் அனைவரும் ஒன்று திரண்டு எமது பொது எதிரியான ஸ்ரீலங்கா அரச பயங்கர வாதிகளை எதிர்த்து எழுச்சிமிகு போராட்டமொன்றை நடாத்தி விடுதலை பெறுவோமாக. என்று ஈரோஸ் தென் ஈழப் பகுதியில் விநியோகித்த துண்டுப்பிரசுரமொன்றில் தெரிவித்துள்ளது.

## ஒரு பிரதிபலிப்பு

குழி தோண்டும் தோழனே
தோண்டு!
எத்தனை குழிகள் இதுவரை —
ஓ!...உனக்கு கணக்கு வைக்க
நேரமில்லையா ?
பத்து... இருபது... நூறு
சரி எத்தனையாக இருந்தால்தான்
உனக்கென்ன?
சற்றே பொறு முன்பெல்லாம்
உன்னை நீ போராளி எனத்தானே
கூறிக் கொண்டாய்.
எப்போது இருந்து இப்படி...
கூட இருந்தவர்க்கு
குழிபறிக்க
இருக்கட்டும் — சற்று பொறு
இங்கே சில—
மனிதனை நேசிக்கும் மனிதர்கள்
இலட்சியம் படைத்த மனிதர்க்கு
இலட்சியம் இழந்த மானிடன்
குழிபறிப்பது கொடுமை—என
கூக்குரல் இடுகின்றனர்
பாவம்—
அவர்கள் அறியாது போயினர்
உனக்குள் இருந்த இதயம்
உன் தலைமையிடம் அடகுவைத்து
அழிந்து போயிற்று—என்பதை
அவர்கள் இருக்கட்டும்
அவர்கள் குரலை—
நீ—உன்
இலட்சியம் போலவே
அலட்சியப்படுத்து,
ஈழப்புரட்சிக்கு குழிபறிக்க
சி. ஐ. ஏ, மொசாட் எதற்கு?
.................................
குழிதோண்டும் துரோகியே
குழி தோண்டு
உன் கால்களின் நேரே
பாதாளம் ஒன்றை படைத்து வை
அதுவே....

கண்ணாடி

## தென் ஈழத்தில் மக்கள் கிளர்ச்சி

தென் ஈழப்பிரதேசத்தில் உள்ள மலையகத்தில் கடந்த 26-01-86 அன்று நடந்த திட்டமிட்ட கலவரத்தினை மலையகமக்கள் நேரடியாக முகங்கொடுக்க முனைந்தமை வழமையாக போலல்லாது பௌத்த இனவாதிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. 94,000 மலையக மக்களுக்கு குடியுரிமை வழங்கப் போவதாக ஸ்ரீலங்கா அரசு வெளியிட்டமையை தவிர்ப்பதற்காகவே இந்த இனக்கலவரம் தூண்டிவிடப்பட்டுள்ளது. கோயிலொன்றுக்கு பிரார்த்தனை செய்யச் சென்ற இம்மக்களை, பெரும்பான்மை மக்களைச் சார்ந்தவர்கள் தாக்க முனைந்த போது உருவான இந்த புதிய வகை எதிர்ப்பானது எமது போராட்டத்தின் புதிய பரிணாமம் என்று நாம் கருதுகின்றோம். இம் மக்கள் ஆரம்பித்துக் கொண்ட தொடர்ச்சியான வேலை நிறுத்தம், தாக்குதலுக்கு எதிரான தடைகளை அமைத்தல், தேசிய பாதுகாப்பு அலுவலகம் மீதான தாக்குதல், எதிர்ப்பு நடவடிக்கையாக 'பொகவந்தலாவ' பொலீஸ் நிலையம் தாக்கப்பட்டமை, இளைஞர்களை கைது செய்து சென்ற இராணுவ வாகனம் மறிக்கப்பட்டு இளைஞர்கள் விடுவிக்கப்பட்டமை, போன்ற நிகழ்வுகளை ஜீரணிக்க முடியாதளவு அரசு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. இதனால் உடனடியாக 28-1-86 அன்று மலையகத்தின் பெரும் பகுதிகளில் ஊரடங்குச் சட்டத்தினை ஸ்ரீலங்கா அரசு பிறப்பித்தது. இங்கு போராட்ட சூழ்நிலைகள் உருவாக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்